RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 244 | செப்டம்பர் 08, 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# தனிப்பட்ட குற்றச் சம்பவங்கள் 'மாநில சட்டம் - ஒழுங்கு சீர்குலைவு' அல்ல: பேரவையில் முதல்வர் விஜய் பதிலுரை

சென்னை: செப்.8-

"ஒரு குற்றம் நடைபெற்றுவிட்டது என்பதால் மட்டுமே ஒட்டுமொத்த மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்று சொல்லிவிட முடியாது. தனிப்பட்ட குற்றச் சம்பவங்களுக்கும், மாநிலத்தின் ஒட்டுமொத்த சட்டம் ஒழுங்கு நிலைக்கும் வேறுபாடு உள்ளது" என்று சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் பேச்சு

காவல் துறை, தீயணைப்புத் துறை மீதான மானியக் கோரிக்கை விவாதத்தின் போது பல்வேறு கட்சியை சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்கள், சட்டம் ஒழுங்கு தொடர்பாக எழுப்பிய கேள்விகளுக்கு முதல்வர் விஜய் நேற்று (செப்.7) பேரவையில் பதில் அளித்தார்.

நேற்று காலை 9.30 மணிக்கு பேரவை கூடியது. இந்தச் சூழலில் எதிர்க்கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள், சட்டம் ஒழுங்கு குறித்து விவாதிக்க வேண்டும் எனக் கூறி கடும் அமளியில் ஈடுபட்டனர். அது தொடர்பாக பேரவையில் அவர்கள் குரல் எழுப்பிய நிலையில் அரசினர் சட்ட முன் வடிவுகள் நிறைவேற்றப்பட்டன.

இதைத் தொடர்ந்து முதல்வர் விஜய் தனது பதிலுரையை தொடங்கினார். "ஒரு மாநிலத்தின் முன்னேற்றம் என்பது சாலைகள் அமைப்பதன் மூலமாகவோ, தொழிற்சாலைகள் வருவதால் மட்டுமே தீர்மானிக்கப்படுவதில்லை. அந்த மாநிலத்தின் ஒவ்வொரு குடிமகனும் எவ்வளவு பாதுகாப்பாகவும், பயம் இல்லாமல் வாழ்கிறார் என்பதில் தான் உண்மையான முன்னேற்றம் இருக்கிறது.

சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருந்தால் தொழில் முதலீடுகள் வரும், புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும், சுற்றுலா துறை வளரும். அதன் மூலம் பெண்களும், இளைஞர்களும் சுதந்திரமாக கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பங்கேற்பார்கள். அதனால் காவல்துறை என்பது குற்றவாளிகள் மட்டும் கைது செய்யும் அமைப்பு அல்ல. ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக அமைதிக்கும், முதலீட்டு சூழலுக்கும், மக்களின் நம்பிக்கைக்கும் அடித்தளமாக விளங்கும் முக்கிய அமைப்பாகும்.

சட்டத்தை மதித்து நடப்பவர்களுக்கு காவல் துறை



உற்ற நண்பராக இருக்கும். அதுவே சட்டத்தை மீறுபவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்ற எதிரியாகவும் இருக்க வேண்டும். காவலர் இந்த இரண்டு பண்புகளையும் கொண்டவராக இருக்க வேண்டும்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு காவலர்கள் எந்தவித அச்சமும், இடையூறும் இன்றி தங்கள் பணியை நேர்மையாக மேற்கொள்வதற்கான சூழலை இந்த அரசு மிகுந்த முன்னுரிமை அளிக்கிறது.

முதல்வர், அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் என எந்தவித அரசியல் அதிகாரத்துக்கும் காவல் துறையின் சட்டப்பூர்வ நடவடிக்கையில் தேவை இல்லாத தலையீடுகள் இருக்கக் கூடாது என வலியுறுத்தி உள்ளேன். குற்றவாளிகள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியை சார்ந்தவராக இருந்தாலும் நடவடிக்கை வேண்டும் என்பதும், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதே இந்த அரசின் நிலைப்பாடு.

அவையின் உறுப்பினர்கள் பலரும் தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு குறித்து தங்கள் கருத்துகளை முன்வைத்துள்ளனர். அரசை குறை கூறும் வகையிலான கருத்துகளை கூட மக்களின் பாதுகாப்பை குறித்த அந்த கருத்துகளை இந்த அரசு மிகுந்த பொறுப்புணர்வுடன் எடுத்து கொள்கிறது. அதன் உண்மைத்தன்மையை பரிசீலித்து ஏற்க வேண்டியதை ஏற்பதில் எந்தவித பாகுபாடும் காட்ட மாட்டோம்.

தமிழ் மரபில் நல்லாட்சிக்கும், நீதிக்கும் மிக உயர்ந்த இடம் வழங்கப்பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கு எப்படி செயல்பட வேண்டும் என்று நமது திருவள்ளுவர், அன்றே யாரிடமும் சார்பு இல்லாமல் நன்றாக ஆராய்ந்து நடுநிலை உடன் நீதி வழங்குவதே முறையான ஆட்சி என்று கூறியுள்ளார். முன்னாள் முதல்வர் காமராஜர் நேர்மையான நிர்வாகத்தையும், முன்னாள் முதல்வர் அண்ணா மக்கள்நல ஆட்சியை வலியுறுத்தினார், முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் ஏழை எளிய மக்களின் நலனை வலியுறுத்தினார்.

இந்த ஆளுமைகளின் சிந்தனைகள் ஒருங்கிணைத்து பார்க்கும் போது காவல் துறை அதிகாரத்தின் அடையாளம் இருக்க கூடாது. அது மக்களின் பாதுகாப்பு மற்றும் நம்பிக்கையின் அடையாளமாக இருக்க வேண்டும்.

குற்றத்தை பார்க்கும் பார்வையில் மாற்றம் வேண்டும். ஒரு குற்றம் நடைபெற்று விட்டது என்பதால் மட்டுமே ஒட்டுமொத்த மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்று சொல்லிவிட முடியாது. தனிப்பட்ட குற்ற சம்பவங்களுக்கும், மாநிலத்தின் ஒட்டுமொத்த சட்டம் ஒழுங்கு நிலைக்கும் வேறுபாடு உள்ளது.

பெண்களை ஆபாசமாகப் பேசினால்... அண்மைக்காலமாக தமிழகத்தில் ஆபாச நதி ஓடிக் கொண்டிருக்கிறது. வன்ம நதி ஓடுகிறது. இந்த நதிகளை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் குறித்து இரட்டை அர்த்தத்தில் பேசுவது, மூன்று அர்த்தத்தில் பேசுவதை எல்லாம் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பெண்களை பற்றி இரட்டை அர்த்தத்தில் பேசுகின்றனர். இனிமேல் பெண்களப் பற்றி அசிங்கமாகப் பேசினால் சட்டம் தன் கடமையைச் செய்யும். அப்படிப் பேசுவதற்கு முன் தங்கள் வீட்டுப் பெண்களை நினைத்து பார்க்க வேண்டும் " என்று முதல்வர் விஜய் எச்சரிக்கை விடுத்தார்.



## "அன்று ஓட்டப்பந்தயம்... இன்று ஒப்புவித்தல் போட்டி" - உதயநிதி விமர்சனம்

சென்னை: செப்.8-

"சட்டம் - ஒழுங்கு குறித்து நாங்கள் கேட்ட எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமல் வெறும் பஞ்ச் டயலாக் மட்டுமே பேசி டைவர்சன் செய்திருக்கிறார் முதல்வர் விஜய்" என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், "அதே ஆக்டிங், பஞ்ச் டயலாக் பேச்சுக்கள்; ரீல்ஸுக்காக மட்டுமே முதல்வர் விஜய் பேசிவிட்டு சென்றுள்ளார். யாரோ எழுதிக் கொடுத்ததை மனப்பாடம் செய்துவிட்டு வந்து வாந்தி எடுத்துள்ளார் . சட்டம் - ஒழுங்கு குறித்து நாங்கள் கேட்ட எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமல் வெறும் பஞ்ச் டயலாக் மட்டுமே பேசி டைவர்சன் செய்திருக்கிறார்.

தமிழகத்தில் ஊழல் செய்து தண்டிக்கப்பட்ட முதல்வர் யார் என உங்களுக்கு தெரியும். எங்கள் மீதான அமலாக்கத்துறை உட்பட அனைத்து வழக்குகளையும் சட்டப்படி சந்திக்கத் தயார். இரு நாட்களுக்கு முன்பு கே.என்.நேரு வீட்டில் சோதனை நடத்தி ஒன்றும் இல்லை என பேட்டி கொடுத்துள்ளனர். கோடநாட்டில் போய், தன்னுடைய பட ரிலீஸுக்காக வாட்ச் மேன் வேலை பார்த்தவர் தான் நம்முடைய முதல்வர்.

அமலாக்கத் துறை கூறியதாக பேசியதெல்லாம் வெறும் குற்றச்சாட்டுகள்தான்; எதுவும் நிரூபிக்கப்படவில்லை. பேரவையில் திமுக மீது பல பொய்யான குற்றச்சாட்டுகளை தொடர்ந்து வைத்தார் முதல்வர் விஜய். அதற்கு விளக்கம் அளிக்க சபாநாயகர் அனுமதி மறுத்ததால் வெளிநடப்பு செய்தோம்.

தவெக அரசுக்கும் முதல்வர் விஜய்யின் பேச்சுக்கும் முழுக்க முழுக்க ஜால்ரா அடித்துள்ளார் பேரவைத் தலைவர்; முதல்வர் பேசி முடித்ததும் வாய்ப்பு தருவதாக சொன்ன பேரவைத் தலைவர் ஏதோ துண்டு சீட்டை பார்த்ததும் வாய்ப்பு தர மறுத்துவிட்டார்.

15 கோடி ரூபாய் வருமானத்தை மறைத்ததாக முதல்வர் மீது கூட வருமான வரி வழக்கு செய்திருக்கிறது. நீங்கள் ஆட்சிக்கு வந்ததை நம்புங்கள், எங்கள் மீது பழி போடாமல் பேச வேண்டும் எனக் கூறினேன். திமுக ஆட்சி நடக்கிறது என்ற நினைப்பில் பொய்யான குற்றச்சாட்டுகளை முதல்வர் கூறுகிறார்.

திங்களன்று பதில் சொல்கிறேன் எனக் கூறி ஓட்டப் பந்தயத்தில் ஓடியது போல ஓடினார். இன்று மனப்பாடம் செய்து ஒப்புவித்தல் போட்டி போல பேரவையில் தவறான, பொய்யான குற்றச்சாட்டுகளை ஒப்பித்துள்ளார்.

விஷ்ணு ரெட்டி, அவரின் மச்சான் சுஜய் ரெட்டி, அவரின் நண்பர் அணில் ரெட்டி இவர்கள் அனைவரும் என்ன பொறுப்பில் இருக்கிறார்கள். ஏன் மைன்ஸ் பொறுப்பை அவர்களிடம் கொடுத்துள்ளீர்கள். அதற்கான ஆதாரங்களை நாங்கள் வெளியிடுவோம். மிசாவைப் பற்றி பேச முதல்வருக்கு என்ன அருகதை இருக்கிறது. இவர் அரசியலுக்கு வந்ததே ஒரு விபத்து" என்று காட்டமாக பதிலடி கொடுத்தார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

## முதல்வரின் பதிலுரைக்கு எதிர்வினையாற்ற அனுமதி மறுப்பு: திமுக வெளிநடப்பு

சென்னை: செப்.8-

முதல்வர் விஜய்யின் உரைக்கு பதில் அளிக்க சபாநாயகர் ஜே.சி. டி. பிரபாகர் அனுமதி மறுத்ததால், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுகவினர் வெளிநடப்பு செய்தனர்.

இன்று காலை சட்டப்பேரவை கூடியதும், அரசினர் சட்ட முன்வடிவுகள் அறிமுகம் செய்யப்பட்டன. அமைச்சர்கள் செங்கோட்டையன், ஆனந்த் உள்ளிட்டோர் தங்கள் அமைச்சரவை சார்ந்த சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய்தனர். 2026-ம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் திருத்த சட்டத் முன்வடிவு, 2026ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு உள்ளிட்டவை அறிமுகப்படுத்தப்பட்டு குரல் வாக்கெடுப்பின் மூலம் அவை நிறைவேற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து முதல்வர் விஜய்யின் பதிலுரை இருந்தது. முதல்வர் விஜய் பேசும்போது, திமுகவின் கடந்த கால ஆட்சியின்போது சர்க்காரியா ஊழல் தொடர்பான ஆவணங்களை வாசித்தார்.

வீராணம் குடிநீர் திட்டத்தை சத்யநாராயணா பிரதர்ஸ் நிறுவனத்துக்கு வழங்க அப்போதைய முதல்வர் கருணாநிதியின் மருமகன் முரசொலி மாறன் 2.5% கமிஷன் கேட்டதாக



ஆவணத்தில் இருப்பதாக அவர் வாசித்தார்.

மேலும், கடந்த திமுக ஆட்சியின்போது 7.5% - 10% வரை கட்சி நிதியாக கமிஷன் வாங்கியதற்கான ஆதாரத்தை அமலாக்கத்துறையே வழங்கியுள்ளதாக முதல்வர் விஜய் தெரிவித்தார். மேலும், இந்த கட்சி நிதி மூலமாக நேரடியாக பலன் பெற்றவர்கள் முதல்வர்கள் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி உள்ளிட்டோர் என்பதை அமலாக்கத்துறை ஆவணம் தெரிவித்துள்ளதாகவும் விஜய் குறிப்பிட்டார்.

முதல்வரின் இந்த பேச்சுக்கு திமுக உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் தொடர்ந்து எழுந்து நின்ற வண்ணம் இருந்தனர்.

எனினும், முதல்வர் தொடர்ந்து தனது உரையை தொடர்ந்தார். திமுகவினரால் தமிழகத்தில் ஆபாச நதி, வன்ம நதி ஆறாக ஓடிக்கொண்டிருப்பதாகவும், இதை அவர்கள் நியாயப்படுத்துவதாகவும் முதல்வர் குற்றம் சாட்டினார்.

அந்த காலத்து அரசியலில் இருந்த நல்லதை மட்டுமே எடுத்துக்கொள்வோம் என்றும், ஆபாசமான, அவதூறான, துருப்பிடிச்ச அரசியல் நமக்கு எதற்கு என்றும் முதல்வர் கேள்வி எழுப்பினார்.

மேலும், "பேசிப் பழகிய பொய், வாங்கி பழகிய கை, போட்டுப் பழகிய பை" என்று கண்ணதாசன் கூறி இருக்கிறார். இதுதான் திமுக; இவ்வளவுதான் திமுக என்றும் முதல்வர் தெரிவித்தார்.

திமுகவினர் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், அவர்கள் மீது அவை விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவை முன்னவர் செங்கோட்டையன் வேண்டுகோள் விடுத்தார்.

இதையடுத்துப் பேசிய சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர், முதல்வர் பேசுவதை தடுக்க வேண்டும் என்ற நோக்கோடு நீங்கள் நடந்து கொள்கிறீர்கள்; இதை அனுமதிக்க முடியாது என்றார்.

அப்போது, திமுக உறுப்பினர்கள் சபாநாயகர் இருக்கை முன்பாக அமர்ந்து அமளியில் ஈடுபட்டனர். முதல்வரின் உரைக்கு பதில் அளிக்க எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

முதல்வரின் பேச்சை முடக்க வேண்டும் என்ற நோக்கோடு நீங்கள் செயல்பட்டதால் உங்களுக்கு வாய்ப்பு அளிக்க முடியாது என சபாநாயகர் தெரிவித்தார்.

பின்னர் பேசிய முதல்வர் விஜய், அனுமதி கொடுங்கள் என கேட்டுக்கொண்டார். இதையடுத்து, அனுமதி கொடுப்பதாக சபாநாயகர் கூறினார்.

எனினும், அவர் பேசிய சில கருத்துக்களுக்கு திமுகவினர் எதிர்ப்பு தெரிவித்ததால், அனுமதி கொடுக்க முடியாது என சபாநாயகர் திட்டவட்டமாகக் கூறினார்.

சபாநாயகரின் இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து திமுகவினர் வெளிநடப்பு செய்தனர்.

## "திமுகவுடன் கூட்டணி அமைக்க முயன்றதாக அடிக்கடி கூறுவதா?" - தவெகவுக்கு அதிமுக கண்டனம்

சென்னை: செப்.8-

"திமுக, அதிமுகவோடு இணைந்து ஆட்சி அமைக்க முயன்றதாக அடிக்கடி சட்டப்பேரவையில் தவறான தகவலை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் திமுகவோடு என்றைக்கும் கூட்டணி அமைக்க விரும்பவில்லை. இது தொடர்பாக எடப்பாடி பழனிசாமி எங்கேயும் பேசவில்லை." என அதிமுக கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சட்டப்பேரவையில் பேசிய அக்ரி கிருஷ்ணமூர்த்தி, "இங்கு பேசிய உறுப்பினர் ஒருவர், அதிமுக திமுவோடு கூட்டணி அமைக்க முயன்றதாகக் குறிப்பிட்டார். அதிமுக யாருடைய தயவிலேயும் தமிழகத்தில் கட்சியை நடத்தவில்லை. அதிமுகவை நிறுவியவர் எம்ஜிஆர். அவருடைய மறைவுக்குப் பின்னால் இந்த இயக்கத்தை எஃகு கோட்டையாக மாற்றியவர் ஜெயலலிதா.

இந்த இருபெரும் தலைவர்களின் மறைவுக்குப் பின்னால், இந்த இயக்கத்தையும் இந்த இயக்கத்தின் தொண்டர்களையும் எடப்பாடி பழனிசாமி காப்பாற்றி வருகிறார். அப்படிப்பட்ட இந்த இயக்கத்தை கலங்கப்படுத்தி யார் பேசினாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

தமிழகத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அமைந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் 1.35 கோடி வாக்குகளுடன் 53 இடங்களைப் பெற்ற இயக்கம் அதிமுக. தனிப்பட்ட முறையில் 47 இடங்களை எடப்பாடி பழனிசாமி வென்றெடுத்திருக்கிறார்.

யாருடைய தயவிலும் நாங்கள் ஆட்சி அமைக்க விரும்பவில்லை. ஆனால், திமுக, அதிமுகவோடு இணைந்து ஆட்சி அமைக்க முயன்றதாக அடிக்கடி தவறான தகவலை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் எங்களை எதிர்க்கட்சியாக செயல்பட அனுமதித்திருக்கிறார்கள். நாங்கள் திமுகவோடு என்றைக்கும் கூட்டணி அமைக்க விரும்பவில்லை. இது தொடர்பாக எடப்பாடி பழனிசாமி எங்கேயும் பேசவில்லை.

திமுக தீய சக்தி என்று சொன்னவர் எம்ஜிஆர், ஜெயலலிதா. அதே வழியில் அதிமுகவை தலைமை தாங்கி நடத்திக்கொண்டிருப்பவர் எடப்பாடி பழனிசாமி. எங்கள் இயக்கத்தைப் பற்றி யார் குறை சொன்னாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். கண்டிக்கிறோம்." எனத் தெரிவித்தார்.

முன்னதாக, அமைச்சர் ஆதவ் அர்ஜுன் பேசும்போது "தவெக குதிரை பேரத்தில் ஈடுபடவில்லை. குதிரை பேரத்தில் ஈடுபட்டவர்கள் யார் என்பது மக்களுக்குத் தெரியும். திமுகவின் ஜெகத்ரட்சகனுக்குச் சொந்தமான அக்கார்டு ஹோட்டலில் குதிரை பேரத்தில் ஈடுபட்டது திமுகதான் என்பதை மக்களுக்கு நாங்கள் தெரியப்படுத்துகிறோம் என கூறி இருந்தார்," என்பது குறிப்பிடத்தக்கது.



## முடிச்சூரில் ஸ்ரீ கிருஷ்ணா சேவை அறக்கட்டளை சார்பில் 6-ம் ஆண்டு கிருஷ்ண ஜெயந்தி விழா

முடிச்சூர், செப்.8-

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் அடுத்த முடிச்சூரில் ஸ்ரீ கிருஷ்ணா சேவை அறக்கட்டளை சார்பில் 6-ம் ஆண்டு கிருஷ்ண ஜெயந்தி விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

முடிச்சூர் சிவா விஷ்ணு கோவில் எதிரே அமைந்துள்ள கண்ணப்பிரான் ஆலயத்தில் நடைபெற்ற இவ்விழாவையொட்டி, மண்ணிவாக்கம் அருள்மிகு ஸ்ரீ சண்முகநாதர் ஆலயத்தில் இருந்து மாலை 4 மணியளவில் கிருஷ்ணர் மற்றும் ராதை வேடமணிந்த சிறுவர், சிறுமியர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்ற வண்ணமயமான ஊர்வலம் நடைபெற்றது.

ஊர்வலம் முடிச்சூர் கண்ணப்பிரான் ஆலயத்தை வந்தடைந்ததை தொடர்ந்து, உரியடி விழா நடைபெற்றது அதனைத் தொடர்ந்து, சிறப்பு வழிபாடுகள் மற்றும் கிருஷ்ண ஜெயந்தி விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

விழாவில் முடிச்சூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பா.தாமோதரன், RSS சக பிரச்சார் பிரமுக் வடதமிழகம் டாக்டர் கே.கோபாலகிருஷ்ணன், இந்து முன்னணி முன்னாள் மாநில அமைப்பாளர் ச.ராஜேஷ், பீடம் தூசி ஸ்ரீ அனுமன் மாதாஜி சஞ்சீவினி, இந்து முன்னணி மாநிலச் செயலாளர் என்.ரவீந்திரன், அரசியல் விமர்சகர் மற்றும் மூத்த பத்திரிகையாளர் வி.எஸ்.ராமன், பாஜக உள்ளாட்சி மேம்பாட்டு பிரிவு செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் டாக்டர் வெற்றி வி.மதன்லால், ஸ்ரீ கிருஷ்ணன் வகா நல வாழ்வு சங்க தலைவர் எல்.கோபன், பிளஸ் குவாலிட்டி இயக்குனர் ப.பிரபீஸ், உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பு உரையாற்றினார்கள்

மேலும், ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் மற்றும் ஆலய நிர்வாகிகள் கலந்து கொண்டு கிருஷ்ண ஜெயந்தி விழாவை சிறப்பித்தனர்

இந்த விழாவை ஸ்ரீ கிருஷ்ணா சேவை அறக்கட்டளை சார்பில் மிகச் சிறப்பாக ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

## செங்குன்றம் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தி விழா

மாதவரம், செப்.8-

மாதவரம் தொகுதி செங்குன்றம் பேரூராட்சி பிடபிள்யூடி ஆபீஸ் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா ஆலயத்தில் 51-ம் ஆண்டு ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி விழா ஆலய நிர்வாகிகள் தலைவர் சங்கர், செயலாளர் வடிவேலன், பொருளாளர் மோகனகிருஷ்ணன், இணை செயலாளர் முரளி, கௌரவத்தலைவர்கள் பாபு, செல்லதம்பி, பன்னீர்செல்வம், கௌரவ ஆலோசகர்கள் ராதா, புண்ணியசேகரன், குமார், விக்னேஷ்வரன், சந்திரசேகர் மற்றும் இளைஞரணி நிர்வாகிகள், கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் கொடிஏற்றுதல், பஞ்சஷக்த ஹோமம், கோலாட்டம், திருமஞ்சனம், ஆதிவராக ஹோமம், திருவிளக்கு பூஜை, திருக்கல்யாண வைபவம், பரதநாட்டியம், சுதர்சன ஹோமத்துடன் மூலவருக்கு சிறப்பு ஆராதனை, உரியடி உற்சவம் உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஆலய அனைத்துநிலை பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு நெய்தீபம் ஏற்றிவைத்து அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.மேலும் இவ்விழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு மங்கள பொருட்கள் மற்றும் அன்னதானம் வழங்கினர்.முடிவில் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது.





■ திருப்பத்தூர் மாவட்டத்தில் அனுமதி இன்றி கனிம பொருட்கள் கடத்திச் செல்வதை தடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில் வருவாய்த்துறை , காவல்துறை , கனிமவளத்துறை சார்பில் தனித்தனியே குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் திருப்பத்தூர் மாவட்டம் புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குனர் தலைமையிலான குழுவினர் (07.09.2026) அன்று வாகன சோதனையில் ஈடுபட்டு இருந்தபோது திருப்பத்தூர் நகரம் கலைமகள் திரையரங்கம் அருகில் உரிய அனுமதி இன்றி 4 டன் வெள்ளை எம் சாண்ட் (White M-Sand) ஏற்றி வந்த டிராக்டர் (TN 16 5625) கைப்பற்றப்பட்டு திருப்பத்தூர் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யக் கோரி புகார் அளிக்கப்பட்டுள்ளது.





## பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த 180 பேருக்கு வெற்றி நாயகி விருது

மாதவரம், செப்.8-

சென்னை சேத்பட்டு சிந்தி மாடல் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் திவ்யா எஜுகேஷனல் அண்ட் சாரிட்டபிள் டிரஸ்ட், கேரியர் குயின்ஸ் மற்றும் சூப்பர் ஸ்டார் அகாடமி இணைந்து பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த மகளிர்களுக்கு வெற்றி நாயகி விருது வழங்கும் விழா இரண்டு கட்டமாக சூப்பர் ஸ்டார் அகாடமியின் நிறுவனரும் முதல்வருமான டாக்டர் பி.உமாமகேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.சி.மஞ்சுளா, உமா மகேஸ்வரி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர், சூப்பர் ஸ்டார் அகாடமி தாளாளர் ஆர்.நாகலிங்கம், துணை முதல்வர் பி.ஜெயலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக பெமி 9 நிறுவனரும், பங்குதாரருமான டாக்டர் வி.கோமதி, செல்வகுமாரி கன்ஸ்ட்ரக் ஷன்ஸ் உரிமையாளர் தேவி பாலாஜி, ஆத்திசூடி இன்டர்நேஷனல் பள்ளி நிர்வாக இயக்குநர் ஜெயசுதா, சேப்கேன்ஸ் ரியாலட்டர் மற்றும் ஹெச்எம்எஸ் டேலன்ட் போர்ஜி நிறுவனரும் இயக்குருமான எஸ். எஸ். ஸ்ரீராம், ஆத்திசூடி இன்டர்நேஷனல் பள்ளி முதன்மை நிர்வாக அதிகாரி பூர்ணிமா சந்திரன் பிரபு, அகில இந்தியப் போட்டியில் 2வது இடம் பெற்ற விளையாட்டு வீராங்கனை பூங்கொடி, சுபா வைபவம் மேட்ரிமோனி சர்வீசஸ் அண்ட் ஈவெண்ட்ஸ் உமா லட்சுமி ராம், எம்பயர் குரூப்ஸ் தலைவர் பிரேமானந்த் பிரபு கலந்து கொண்டு 180-க்கும் மேற்பட்டோருக்கு வெற்றி நாயகி விருது வழங்கி பாராட்டி வாழ்த்தினர்.

இதில் சூப்பர் ஸ்டார் அகாடமியின் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். முடிவில் புஷ்பாபசுபதி, ஜான்வி ஆகியோர் அனைவருக்கும் நன்றி கூறினார்.



## தேனி மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில், காவலர் தினம் கொண்டாடப்பட்டது

தேனி செப்.8-

தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம், தலைமையில் காவலர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது இந்நிகழ்வில் காவலர்களை உற்சாகப்படுத்தும் வகையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. மேலும், காவலர்களின் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் மற்றும் குடும்பத்தினருக்கான விளையாட்டுப் போட்டிகளும் சிறப்பாக நடத்தப்பட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். காவலர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் மகிழ்ச்சியையும், மன உறுதியையும் மேம்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்வு காவலர்களுக்கிடையே சிறப்பான வரவேற்பைப் பெற்றது.



## பந்தலூரில் மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம்

நீலகிரி, செப்.8-

நீலகிரி மாவட்டம் பந்தலூர் புனித சேவியர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கண் தான இரு வார விழாவை முன்னிட்டு மாபெரும் இலவச கண் சிகிச்சை மற்றும் கண் கண்ணாடிகள் வழங்கும் முகாம் நடைபெற்றது.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், நீலகிரி மாவட்ட பார்வையிழப்பு தடுப்பு சங்கம், ஷாலோம் சாரிட்டபிள் டிரஸ்ட் மற்றும் மகாத்மா காந்தி பொது சேவை மையம் ஆகியவை இணைந்து நடத்திய முகாமிற்கு கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையத்தின் பொதுச்செயலாளர் சிவசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். ஷாலோம் சாரிட்டபிள் டிரஸ்ட் இயக்குநர் விஜயன் சாமுவேல், மகாத்மா காந்தி பொது சேவை மையத் தலைவர் நௌசாத், சமூக ஆர்வலர் இந்திரஜித் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

உதகை அரசு மருத்துவக்கல்லூரி கண் மருத்துவர் திலீப் கண் தானம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

நீலகிரி மாவட்ட பார்வையிழப்பு தடுப்பு சங்க மருத்துவக் குழுவினர் சார்பில், உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண் மருத்துவர் திலீப், கூடலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை கண் மருத்துவர் தாவா ஆகியோர் தலைமையில் மருத்துவ குழுவினர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை அளித்தனர்.

முகாமில் 200-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து சிகிச்சை பெற்றனர். பரிசோதனையில் 35 பேர் கண் புரை அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்யப்பட்டனர். அவர்கள் உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கூடலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, இலவசமாக கண் புரை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், பரிசோதனையில் கிட்டப்பார்வை குறைபாடு கண்டறியப்பட்ட 76 பேருக்கு இலவச கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், மகாத்மா காந்தி பொது சேவை மையம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



## "எம்மதமும் சம்மதம்" - திண்டுக்கல் மேற்கு மாவட்ட அலுவலகத்தில் அமைச்சர் விக்னேஷ் நெகிழ்ச்சி!

திண்டுக்கல். செப்.8-

திண்டுக்கல் மேற்கு மாவட்ட தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்த பொறுப்பு அமைச்சர் விக்னேஷ், மூன்று மத தெய்வங்களின் திருவுருவத்திற்கும் விளக்கேற்றி எம்மதமும் சம்மதம் என்ற உணர்வை அனைவருக்கும் உணர்த்தினார்.

திண்டுக்கல் மேற்கு மாவட்ட தலைமை அலுவலகத்திற்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சரும், திண்டுக்கல் பொறுப்பு அமைச்சருமான விக்னேஷ் வருகை தந்தார். அப்போது அலுவலகத்தில் இருந்த முருகன், இயேசு உள்ளிட்ட மூன்று மத தெய்வங்களின் திருவுருவப் படங்களுக்கும் அவரே விளக்கேற்றி மரியாதை செலுத்தினார். மத நல்லிணக்கத்தை பறைசாற்றும் வகையில் அவரது இந்த செயல் அங்கிருந்த அனைவரையும் நெகிழச் செய்தது.

பின்னர் மேற்குமாவட்டச் செயலாளர் கார்த்திக் ராஜா, மாவட்ட செயற்குழு உறுப்பினர் பழனி பாலன், நகரச் செயலாளர் மிதுன், மாவட்ட துணைச் செயலாளர் விஜய் சிவா. மாவட்ட துணை செயலாளர் நாகராஜ். .உள்ளிட்ட நிர்வாகிகள் அமைச்சருக்கு பொன்னாடை அணிவித்து, பூங்கொத்து வழங்கி உற்சாக வரவேற்பு அளித்தனர். மேலும் நிகழ்வில் முத்துப்பாண்டி. லட்சுமி காந்தன். மாரி. சரவணவேல். சங்கரலிங்கம். மகேஷ் கார்த்திக். பிரவீன். சதீஷ் மற்றும் கட்சி நிர்வாகிகளுடன் முக்கிய ஆலோசனைகளை மேற்கொண்டார். இந்த நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள், பேரூர் கழகச் செயலாளர்கள் உட்பட 200-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

அரசியலுக்கு அப்பாற்பட்டு அனைத்து மதங்களையும் மதிக்கும் அமைச்சரின் இந்த செயல், தொண்டர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

## கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்ட தி.மு.க., அவசர செயற்குழு கூட்டம்

கிருஷ்ணகிரி, செப்.8-

கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்ட திமுக அவசர செயற்குழு கூட்டம் நடந்தது. திமுக தலைமைக் கழக செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் படியும், கழகத் தலைவரின் ஆணைக்கிணங்கவும், கழக அமைப்புகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் கழக மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, கிளைக் கழகம் முதல் வட்டம், பேரூர், ஒன்றியம், நகரம் உள்ளிட்ட அனைத்து கழக அமைப்புகளிலும் மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைப்பு மற்றும் அமைப்புத் தேர்தல் பணிகள் தொடர்பாக தலைமைக் கழகம் வகுத்துள்ள



வழிகாட்டுதல்களை விளக்கவும், கழக நிர்வாகிகளின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைப் பெறவும் தலைமைக் கழகப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக அவசர செயற்குழுக் கூட்டம் நேற்று காலை கிருஷ்ணகிரி குறிஞ்சி மஹால் திருமண மண்டபத்தில் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ் அவர்கள் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் மதியழகன் தீர்மான விளக்கவுரையாற்றினார்

இக்கூட்டத்தில், கிருஷ்ணகிரி மாவட்ட கழக மறுசீரமைப்புப் பணிகளுக்காக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள தலைமைக் கழகப் பிரதிநிதிகளான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி மற்றும் மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோர் முன்னிலை வகித்து, கழக மறுசீரமைப்பு, அமைப்புத் தேர்தலுக்கான வழிமுறைகள் மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து விரிவான ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினர். மேலும், இக்கூட்டத்தில் வருகிற 15ம் அண்ணா பிறந்தநாள் விழா மற்றும் முப்பெரும் விழாவை சிறப்பாக நடத்துவது குறித்தும், கழக ஆக்கப்பணிகளை மேலும் தீவிரப்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

கூட்டத்தில், முன்னாள் மாவட்ட செயலாளர் செங்குட்டுவன், முன்னாள் எம்பி.க்கள் சுகவனம், வெற்றிச்செல்வன், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம். வெங்கடேசன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் கேவிஎஸ் சீனிவாசன், அன்பரசன், முன்னாள் எம்எல்ஏ.க்கள் கிருஷ்ணமூர்த்தி, நரசிம்மன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசுமூர்த்தி, மாவட்ட பொருளாளர் கதிரவன், செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர் பாலன், நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன், நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி, ஒன்றிய செயலாளர்கள் தனசேகரன், சுப்பிரமணி, சரவணன், நாராயணன், மகேந்திரன், சாந்தமூர்த்தி, க.மகேந்திரன், ராஜேந்திரன், அறிஞர், செல்வம், குமரேசன், ரஜினிசெல்வம், செந்தில், குண.வசந்தரசு, பேரூராட்சி தலைவர்கள் பாபு, வெங்கட்டப்பன், தம்பிதுரை, பார்த்தீபன், பேரூராட்சி தலைவர்கள் அம்மானுல்ல, சந்தோஷ்குமார், அம்சவேணி செந்தில்குமார், அணிகளின் அமைப்பாளர்கள் தினேஷ்ராஜன், ஜெயேந்திரன், லட்சுமிபிரியா மற்றும் விஜய்ராஜசேகர், வெங்கடேஷ்ராஜா, புஷ்பா, ஜீவானந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# கிருஷ்ணகிரி லண்டன் பேட்டையில் 6-ம் ஆண்டு நபிகள் நாயகம் (ஸல்) பிறந்தநாள் விழா

## அனைத்து சமுதாய மக்களின் பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்றது நலத்திட்ட உதவிகள் வழங்கல்

கிருஷ்ணகிரி, செப்.8-

கிருஷ்ணகிரி லண்டன் பேட்டை பகுதியில் அனைத்து சமுதாய சொந்தங்களும் கலந்து கொண்ட 6-ம் ஆண்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த நாள் விழா சிறப்பாக நடைபெற்றது.

லண்டன் பேட்டை, கிருஷ்ணகிரி மஸ்ஜிதே எதிரில், அண்ணா சிலை மற்றும் புதிய பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற இவ்விழாவில், பொதுமக்கள் மற்றும் பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

விழாவிற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான திரு. தே. மதியழகன் அவர்கள் தலைமை வகித்தார். தலைமைக் கழகப் பிரதிநிதியும், முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினருமான திரு. ஆ. கிருஷ்ணசாமி மற்றும் மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் திருமதி. நாமக்கல் ப. ராணி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.


மேலும், கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளூர் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

விழாவின் ஒரு பகுதியாக, பெண்களுக்கு தையல் இயந்திரங்கள், புடவைகள், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடைகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. பொதுமக்களின் தேவையை கருத்தில் கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதுடன், விழாவில் கலந்து கொண்ட பயனாளிகள் மகிழ்ச்சியுடன் உதவிகளை பெற்றுக்கொண்டனர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற இவ்விழா, அனைத்து சமுதாய மக்களும் ஒற்றுமையுடன் பங்கேற்ற நிகழ்வாக அமைந்தது. சமூக நல்லிணக்கம், சகோதரத்துவம் மற்றும் மனிதநேயத்தை வலியுறுத்தும் வகையில் விழா சிறப்பாக நடைபெற்றது.

விழா ஏற்பாட்டாளர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் அமைந்துள்ள காவலர் நினைவிடத்தில் வீரமரணம் அடைந்த காவலர்களை போற்றும் விதமாக திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் வீரவணக்கம், அஞ்சலி





திருப்பத்தூர், செப்.8-

திருப்பத்தூர் மாவட்ட 1859 ஆம் ஆண்டு மெட்ராஸ் காவல் சட்டத்தை நிறைவேற்றி, நவீன மற்றும் அமைப்புரீதியான காவல்துறை தோற்றுவிக்கப்பட்ட செப்டம்பர் 6 ஆம் நாள் இனி ஆண்டுதோறும் காவலர் நாளாக கொண்டாடப்படும் என மாண்புமிகு தமிழக முதல்வர் பிறப்பித்த அரசாணையின்படி செப்டம்பர் (06.09.2026) அன்று திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் அமைந்துள்ள காவலர் நினைவிடத்தில் வீரமரணம் அடைந்த காவலர்களை போற்றும் விதமாக திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வாகரே, இ.கா.ப., மலர்தூவி வீரவணக்கம் மற்றும் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினார். பின்னர் மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் இந்திய அரசியலமைப்பின் பாலும், தமிழ்நாடு காவல்துறையின், உயரிய நோக்கங்களின் பாலும், நான் உண்மையான ஈடுபாடும் உளமார்ந்த பற்றும் கொண்டிருப்பேன் என்று மனமாற உறுதி கூறுகிறேன். எந்தவித அச்சமோ விருப்பு வெறுப்போ இன்றி அனைத்து தரப்பு மக்களுக்கும் நியாய உணர்வுடன் என் கடமைகளை நிறைவேற்றுவேன் என்றும் உறுதியளிக்கிறேன் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வாகரே, இ.கா.ப., தலைமையில் காவலர்கள் உறுதிமொழி ஏற்றனர். நிகழ்ச்சியில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் காவல் துணை கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல்துறையினர் பங்கேற்றனர். மாவட்டத்தில் அனைத்து காவல் நிலையங்களிலும் காவலர் தினம் உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டது. காவலர் தினத்தை முன்னிட்டு பாய்ச்சல் ஆயுதப்படை மைதானத்தில் காவலர்கள் மற்றும் காவல்துறை குடும்பத்தினருக்கு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது பின்பு கலைநிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பரிசுகள் வழங்கி பாராட்டினார்.



■ திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்துக்கு உட்பட்ட, ஆட்டந்தாங்கல் கிராமம், நாகாத்தம்மன் நகர், சர்.சி.வி.ராமன் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் ஸ்ரீ ரேணுகா பரமேஸ்வரி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆலய நிர்வாகி பூஜா அம்மா மற்றும் திருநங்கைகள் இணைந்து கும்பாபிஷேகத்தை சிறப்பாக செய்திருந்தனர். வருகை தந்த பக்தர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது.



# படத்தில் அடுக்கடுக்கான வசனங்கள் பேசுவது போல கத்தி கூப்பாடு போடுவது, அநாகரிகமான அரசியல்

## நயினார் நாகேந்திரன்

சென்னை, செப்.8-

படத்தில் அடுக்கடுக்கான வசனங்கள் பேசுவது போல கத்தி கூப்பாடு போடுவது, அநாகரிகமான அரசியல் என்ற தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

சட்டமன்றம் உங்கள் சினிமா ஸ்டுடியோ அல்ல முதல்-அமைச்சர் விஜய் அவர்களே! உங்கள் அடுக்கடுக்கான வசனங்களை கேட்டு ஆர்ப்பரிப்பதற்கு தமிழக மக்கள் ஒன்றும் உங்கள் கட்சியின் ஆச்சரியக்குறிகள் அல்ல. உங்கள் கட்சிக்கு இரண்டு அமைச்சர்களை வழங்கிய கோயம்புத்தூர் மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 10 கொலைகள் நடந்துள்ளன. உங்கள் அலுவலகம் அமைந்துள்ள சென்னை மாநகரில் நேற்று ஒரே நாளில் மட்டும் இரண்டு படுகொலைகள் நடந்துள்ளன. நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து 6 காவல் மரணங்கள் நிகழ்ந்துள்ளன. பாதுகாப்புப் பணியில் இருக்கும் காவலர்களில் சிலர் பொதுமக்களை தரக்குறைவாக நடத்துகின்றனர். உங்கள் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் காவல்துறையின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். அப்படியிருக்கையில் இன்று சட்டமன்றத்தில் நடைபெற்ற காவல்துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது, இந்த அவலங்களுக்கெல்லாம் நீங்கள் முறையாக பதில் அளித்திருக்க வேண்டும். சீரழிந்து கொண்டிருக்கும் தமிழகத்தின் சட்டம் ஒழுங்கிற்கு முழுப்பொறுப்பேற்று, மக்கள் பாதுகாப்பிற்கென புதிய திட்டங்களை நீங்கள் முன்மொழிந்திருக்க வேண்டும். மக்களின் உயிருக்கும் உடமைக்கும் உத்தரவாதம் அளித்திருக்க வேண்டும். ஆனால், நீங்களோ “எனக்கும் சட்டம் ஒழுங்கிற்கும் எந்த தொடர்புமில்லை” என்ற ரீதியில், அதிரடி திரைப்படத்தில் அடுக்கடுக்கான வசனங்கள் பேசுவது போல கத்தி கூப்பாடு போடுவது, அநாகரிகமான அரசியல். எனவே, மக்கள் மன்றத்தில் மக்கள் நலன் சார்ந்த விஷயங்களை மட்டும் பேசுங்கள் முதல்வரே, “தந்தை, மகன்” கதையெல்லாம் தமிழக மக்களுக்கு தேவையில்லை. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.





# வாணியம்பாடி முழுநேர கிளை நூலகத்தினை பயன்படுத்தி D.R.B போட்டி தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்க்கு பாராட்டு

திருப்பத்தூர், செப்.8-

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி முழு நேர கிளை நூலகத்தை பயன்படுத்தி அரபாண்டகுப்பம் கிராமத்தை சேர்ந்த ச.பாலாஜி MCA., வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தேர்வில் தேர்ச்சி பெற்று வேலூர் தோட்டப்பாளையம் கிளையில் உதவியாளராக பணிநியமனம் பெற்றதை பாராட்டி வாணியம்பாடி நூலக வாசகர் வட்ட தலைவர் மு.பார்த்தீபன் வாணியம்பாடி வாழ்த்துகளை தெரிவித்தார்கள் மேலும் ச.பாலாஜி வாணியம்பாடி நூலக வளர்ச்சிக்காக ரூபாய் ஆயிரம் செலுத்தி 265 வது புரவலராக சேர்ந்தார். உடன் வாணியம்பாடி நூலகத்தின் நூலகர் ஜெ.விஜயகுமார் மற்றும் நூலக போட்டி தேர்வு மாணவ மாணவிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

# தஞ்சையில் ஆவின் பாலுக்கு கடும் தட்டுப்பாடு - பொதுமக்கள் அவதி



தஞ்சாவூர், செப்.8-

தஞ்சாவூர் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் ஆவின் பால் விநியோகம் குறைந்துள்ளதால் ஆவின் பால் தட்டுப்பாடு, பொதுமக்கள் தனியார் பாலுக்கு மாறும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக தஞ்சையில் ஆவின் பாலுக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருவதால் பொதுமக்கள் அவதி அடைந்து உள்ளனர். ஆவின் பால் விநியோகத்தை சுத்தமாக நிறுத்தி விட்டதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டி உள்ளனர்.

கோடை மழை பொய்த்தது மற்றும் கால்நடை தீவனங்களின் விலை உயர்வு காரணமாகத் தமிழகத்தில் ஒட்டுமொத்த பால் உற்பத்தி சமீப மாதங்களாக சரிவை சந்தித்துள்ளது. அதே போல திருச்சி, தஞ்சை உள்ளிட்ட டெல்டா மற்றும் பிற மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலின் பெரும் பகுதி, சென்னை மற்றும் மாநிலத்தின் பிற முக்கிய பெரிய நகரங்களில் நிலவும் ஆவின் பால் தட்டுப்பாட்டைச் சமாளிக்க அங்கு அனுப்பப்படுவதாக உள்ளூர் முகவர்கள் குற்றம் சாட்டி உள்ளனர்.

அதிகாலையிலேயே ஆவின் பால் தீர்ந்துவிடுவதால், வேறு வழியின்றி பொதுமக்கள் அதிக விலை கொடுத்து தனியார் பாக்கெட் பாலை வாங்கத் தொடங்கியுள்ளனர். இருப்பினும், தனியார் நிறுவனங்களும் அண்மையில் தங்களின் பால் விலையை உயர்த்தியுள்ளது பொதுமக்களுக்குக் கூடுதல் சுமையாக மாறியுள்ளது.

# தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது.



தேனி, செப்.8-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 476 கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர், பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்டத்துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். முன்னதாக, மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார். அதனைத்தொடர்ந்து, வருவாய்த்துறையின்சார்பில், 30 பயனாளிகளுக்கு ரூ.21,70,550/- மதிப்பீட்டில் விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய்அலுவலர் .ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் .இராமகிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர். கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர். கதிர்வேல் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ‘செல்வாக்கு மிக்கவர்கள் மீதான ஊழல் வழக்கை விசாரிப்பது சிரமம்’; - சென்னை உயர் நீதிமன்றம் அதிருப்தி



சென்னை, செப்.8-

இந்தியாவில் செல்வாக்கு மிகுந்த நபர்கள் மீதான ஊழல் வழக்கை விசாரிப்பது சிரமமாக உள்ளது என சென்னை உயர் நீதிமன்றம் அதிருப்தி தெரிவித்தது.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணிக்கு எதிரான டெண்டர் முறைகேடு வழக்கில், கந்தசாமி மற்றும் விஜயகார்த்திகேயன் ஆகிய இரு ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தொடர அனுமதி வழங்க தாமதம் செய்வது ஏன் என்பது குறித்து விளக்கம் அளிக்கும்படி மத்திய அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் முன்பு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, மத்திய அரசுத் தரப்பில், ‘வழக்கு தொடர அனுமதி வழங்கக் கோரி தமிழக அரசு அனுப்பிய விளக்கம் கடிதம் ஜூலை 28-ம் தேதி கிடைக்கப் பெற்றது. அதன்மீது பரிசீலனை நடந்து வருகிறது’ எனத் தெரிவிக்கப்பட்டது.

தமிழக அரசுத் தரப்பில், ‘இது தொடர்பாக ஆகஸ்ட் 27-ம் தேதி நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டு உள்ளது’ எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதி, ‘ஊழல் வழக்கில் அனுமதி வழங்க தாமதம் ஏற்படுத்துவது ஏன்? இந்தியர்கள் ஊழலுக்கு எதிராக எதிர்ப்பு தெரிவிப்பது இல்லை. இதுபோன்ற வழக்கில் இருந்துதான் முடிவுக்கு வரவேண்டி உள்ளது.

ஓர் ஊழல் வழக்கில் ஒப்புதல் பெறுவதற்கு நீதிமன்றம் எவ்வளவு வற்புறுத்த வேண்டியுள்ளது. இந்தியாவில் செல்வாக்கு மிகுந்த நபர்கள் மீதான ஊழல் வழக்கை விசாரிப்பது சிரமமாக உள்ளது. அனுமதி பெறுவதற்கே இவ்வளவு சிரமங்களை சந்திக்க வேண்டியுள்ள சூழலில், இதற்குபின் இந்த வழக்கில் என்ன நடக்கும் என கடவுளுக்குத்தான் தெரியும்’ என அதிருப்தி தெரிவித்தார்.

பின்னர், இந்த வழக்கில் ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தொடர ஒப்புதல் வழங்க தாமதம் ஏற்பட்டது ஏன் என்பது குறித்தும், ஒப்புதல் கோரிய கடிதத்தின் தற்போதைய நிலை என்ன என்பதையும் காணொலி வாயிலாக ஆஜராகி விளக்கம் அளிக்க மத்திய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சி துறை சார்பு செயலாளருக்கு உத்தரவிட்டு, விசாரணையை செப்டம்பர் 16-ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.



## திருப்பூரில் வ.உ.சிதம்பரனார் 155-வது பிறந்தநாள் விழா

திருப்பூர், செப்.8-

சுதந்திரப் போராட்டத் தியாகி வ.உ. சிதம்பரனார் பிள்ளையின் 155-வது பிறந்தநாள் விழா, பிள்ளைமார் சங்கத்தின் சார்பில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் வ.உ. சிதம்பரனார் ஆற்றிய பங்களிப்பு மற்றும் அவரது வரலாற்றுச் சிறப்புகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், வ.உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் சுதந்திரப் போராட்டப் பங்களிப்புகளை விளக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட புத்தகம் வெளியிடப்பட்டது. அந்தப் புத்தகத்தை பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பெற்றுக் கொண்டனர்.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டு நிகழ்ச்சி சிறப்பாக நிறைவுற்றது.



## திருப்பூர் பழைய பேருந்து நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் திடீர் ஆய்வு

திருப்பூர், செப்.8-

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே, மாநகராட்சிக்குட்பட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையத்தில் அடிப்படை வசதிகள் குறித்து திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, பேருந்துகள் ஒதுக்கப்பட்ட சரியான நிறுத்தங்களில் நிறுத்தப்படுகிறதா என்பதையும், பேருந்து இயக்க நேர அட்டவணை மற்றும் அறிவிப்புப் பலகைகள் பயணிகள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளனவா என்பதையும் அவர் பார்வையிட்டார்.

மேலும், சுகாதாரமான குடிநீர் வசதி, ஆண் மற்றும் பெண்களுக்கான கழிவறைகள், பயணிகள் இருக்கைகள், காத்திருப்பு அறை, பச்சிளம் குழந்தைகளுடன் பயணிக்கும் தாய்மார்களுக்கான தனி அறை, காவல் உதவி மையம் உள்ளிட்ட வசதிகளையும் ஆய்வு செய்தார்.

பயணிகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து, தேவையான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது மாநகராட்சி ஆணையாளர் எம்.பி. அமித், மாநகர காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) ராஜராஜன், வட்டார போக்குவரத்து அலுவலர் (வடக்கு) கவின் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



## சேதமடைந்த மின் கம்பங்களை மாற்றக்கோரி போராட்ட எச்சரிக்கை

காரைக்குடி, செப்.8-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகராட்சியின் 27 மற்றும் 28-வது வார்டுகளுக்கு உட்பட்ட முத்துராமலிங்க தேவர் நகர், கே.எம்.சி. காலனி பகுதிகளில் சேதமடைந்த மின் கம்பங்களை மாற்றித் தரக்கோரி பொதுமக்கள் மற்றும் நமது உரிமை பாதுகாப்பு இயக்கத்தினர் மீண்டும் மின்வாரிய அலுவலகத்தில் மனு அளித்தனர்.

இப்பகுதிகளில் மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ள மின் கம்பங்களை மாற்றித் தர வேண்டும் என இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே 27-வது வார்டு அதிமுக கவுன்சிலர் பிரகாஷ் கோரிக்கை மனு அளித்திருந்தார். இதையடுத்து மின்வாரிய அலுவலர்கள் சம்பந்தப்பட்ட இடங்களை ஆய்வு செய்து, புதிய மின் கம்பங்களையும் கொண்டு வந்து பழைய கம்பங்களின் அருகே இறக்கி வைத்ததாக கூறப்படுகிறது.

ஆனால் இரண்டு ஆண்டுகள் கடந்தும் பழைய சேதமடைந்த மின் கம்பங்கள் மாற்றப்படாமல், புதிய கம்பங்கள் சாலையோரத்திலேயே கிடப்பதாக பொதுமக்கள் குற்றம்சாட்டினர். இதுகுறித்து உதவி பொறியாளர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று காலை நமது உரிமை பாதுகாப்பு இயக்கத்தின் 28-வது வார்டு உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் காரைக்குடி மின்வாரிய அலுவலகத்திற்கு மீண்டும் மனு அளிக்க சென்றனர். அப்போது EE, AD, AE உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அலுவலகத்தில் இல்லாததால் மனுவை யாரிடம் அளிப்பது என தெரியாமல் அவர்கள் காத்திருந்தனர்.

பின்னர் கவுன்சிலர் பிரகாஷ், இயக்க உறுப்பினர்கள் சிலம்பரசன், ஜேம்ஸ், கார்த்திக், முத்துபோஸ், அனந்தகிருஷ்ணன் மற்றும் பொதுமக்கள் மின்வாரிய அலுவலக நுழைவாயிலில் மனுவுடன் அமர்ந்தனர். சுமார் ஒரு மணி நேரத்திற்கு பிறகு வந்த போர்மேன் மனுவை பெற்றுக் கொண்டார்.

அப்போது, இரண்டு ஆண்டுகளாக நிலுவையில் உள்ள மூன்று சேதமடைந்த மின் கம்பங்களை உடனடியாக மாற்றுவதோடு, புதிய மின் கம்பங்களில் மின் பகிர்மான கம்பிகளையும் மாற்றி அமைக்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.

மேலும், ஒரு வார காலத்திற்குள் பணிகளை மின்வாரியம் செய்து முடிக்காவிட்டால், மின் கம்பங்களுக்கு பாடைகட்டும் போராட்டம் நடத்தப்படும் என கவுன்சிலர் பிரகாஷ் மற்றும் பொதுமக்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

காவல்துறையினர் புகார் பெறவில்லை என குற்றச்சாட்டு

## மாவட்ட ஆட்சியரிடம் குடும்பத்தினர் மனு வரதட்சணை கொடுமை, நகைகள் பறிப்பு, கோவில் வளாகத்தில் தாக்குதல் என பரபரப்பு புகார்

சிவகங்கை, செப்.8-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தாலுகா மணமேல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த கார்த்திக் மீது வரதட்சணை கொடுமை, திருமண மோசடி, நகைகள் பறிப்பு மற்றும் பெண் வீட்டாரை தாக்கியதாக நடவடிக்கை கோரி, பாதிக்கப்பட்டதாக கூறப்படும் குடும்பத்தினர் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில் மனு அளித்துள்ளனர்.



மதுரை மாவட்டம் மேலூர் தாலுகா கீழவளவைச் சேர்ந்த க.மாசிலாமணி (70) என்பவரின் மகள் திவ்யாணியை கார்த்திக்கிற்கு சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்து வைத்ததாகவும், திருமணத்திற்கு முன்பே கார்த்திக் மற்றொரு பெண்ணுடன் நீண்டகாலமாக தொடர்பில் இருந்ததை மறைத்து திருமணம் செய்ததாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமணத்திற்குப் பின்னர் திவ்யாணியின் நகைகளை பெற்றுக்கொண்டதுடன், மேலும் ரூ.20 லட்சம் பணம் அல்லது வீடு வாங்கி வர வேண்டும் எனக் கூறி கொடுமைப்படுத்தியதாகவும் குடும்பத்தினர் குற்றம்சாட்டியுள்ளனர். இதனால் திவ்யாணி கடந்த 4 மாதங்களாக தனது அண்ணன் வீட்டில் வசித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் 29-ஆம் தேதி சமாதானம் பேசுவதாகக் கூறி பெண் வீட்டாரை மணமேல்பட்டிக்கு அழைத்து, ஸ்ரீ ஆச்சியம்மன் கோவில் வளாகத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றபோது தகராறு ஏற்பட்டதாகவும், அப்போது கார்த்திக் தரப்பைச் சேர்ந்த சுமார் 15 பேர் தனது மகனை தாக்கியதுடன், தன்னையும் மிரட்டி அவமதித்ததாகவும் மாசிலாமணி தெரிவித்துள்ளார்.

காவல்நிலையத்தில் புகார் அளிக்க முயன்றும் பெறவில்லை என புகார்

இந்த சம்பவம் தொடர்பாக நடவடிக்கை கோரி திருப்பத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று புகார் மனு அளிக்க முயன்றதாகவும், ஆனால் தங்களது புகார் மனுவை காவல்துறையினர் பெற்றுக்கொள்ளவில்லை என்றும் மாசிலாமணி மற்றும் அவரது குடும்பத்தினர் குற்றம்சாட்டியுள்ளனர்.

புகார் மனுவை காவல்துறையினர் ஏற்காததால், தங்களது குறையை மேலதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில் மனு அளித்ததாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

தங்களிடம் உள்ள செல்போன் ஆடியோ பதிவுகள் மற்றும் சாட்சிய ஆதாரங்களை ஆய்வு செய்து, சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தனது மகளின் நகைகளை மீட்டுத்தர வேண்டும் என்றும் மாவட்ட நிர்வாகத்திடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




## குடியிருப்பு அருகே குப்பை கொட்டும் முடிவை கைவிட கோரி ஆட்சியரிடம் மனு

சிவகங்கை, செப்.8-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இளையான்குடி பேரூராட்சியில் சேகரிக்கப்படும் குப்பைக் கழிவுகளை கீழாயூர் காலனி குடியிருப்புகளுக்கு அருகே கொட்ட திட்டமிட்டுள்ளதாக கூறி, அந்த முடிவை கைவிட வேண்டும் என கீழாயூர் காலனி மற்றும் சுற்றுப்புற கிராம மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

குடியிருப்பு பகுதிக்கு அருகே குப்பைக் கழிவுகள் கொட்டப்பட்டால் சுகாதார சீர்கேடு மற்றும் பொதுமக்களுக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்படும் என எதிர்ப்பு தெரிவித்த மக்கள், மாற்று இடத்தை தேர்வு செய்ய வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

மனு அளிக்கும் நிகழ்வில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தாலுகா செயலாளர் எஸ். ராஜு, 11-வது வார்டு கவுன்சிலர் ராஜவேலு, மின்வாரிய ஓய்வூதியர் ஜேசுராஜ், விசிக நிர்வாகி ஆர்டிஸ்ட் ஆறுமுகம், வழக்கறிஞர் தீரண், டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் சமூக நலச்சங்க தலைவர் சாகுல்ஹமீது, பொருளாளர் பரிசுத்த மங்களசாமி, ராஜபிரபாகரன், ஊர் சமூக தலைவர் முருகவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.





## காளையார்கோவில் அருகே கோர விபத்து

### 2 இளைஞர்கள் பலி, 3 பேர் படுகாயம்

சிவகங்கை, செப்.8-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் அருகே நேற்று அதிகாலை கார் கட்டுப்பாட்டை இழந்து சாலையோர புளியமரத்தில் மோதிய விபத்தில் 2 இளைஞர்கள் உயிரிழந்தனர். மேலும் 3 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிவகங்கையைச் சேர்ந்த கார்த்திக்கேயன், ஷேக் முஹம்மது, வெங்கட சுப்ரமணியன், தேவா, விக்னேஷ் ஆகிய 5 நண்பர்கள் காரில் காளையார்கோவிலில் இருந்து சிவகங்கை நோக்கி சென்று கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

கொல்லங்குடி அருகே கார் சென்றபோது திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோர புளியமரத்தில் மோதியது.

இந்த விபத்தில் கார்த்திக்கேயன் மற்றும் ஷேக் முஹம்மது ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். வெங்கட சுப்ரமணியன், தேவா, விக்னேஷ் ஆகிய மூவரும் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த மூவரும் மீட்கப்பட்டு சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பாக காளையார்கோவில் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## பர்கூர் அருகே விஜயநகரர் கால அரிய ஏரிக் கல்வெட்டு கண்டுபிடிப்பு

கிருஷ்ணகிரி, செப். 8-

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே விஜயநகரர் கால அரிய ஏரிக் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. கிருஷ்ணகிரி வரலாற்று ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் சங்கம், தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவனம் ஆகியவை இணைந்து, பர்கூரை அடுத்த கொட்டிலேட்டி என்ற கிராமத்தில் ஆய்வு மேற்கொண்டபோது, இவ்வூரில் உள்ள ஸ்ரீகோபால கிருஷ்ணர் கோயில் 300 வருடத்திற்கு முந்தய மத்வ பிருந்தாவனமாக இருந்துள்ளது தெரியவந்தது. அந்த பழமையின் அடையாளத்தை அப்படியே வைத்து அதை தற்போது கிருஷ்ணன் கோயிலாக கட்டியுள்ளனர். மேலும் அதே ஊரைச் சேர்ந்த கோவிந்தாஜ் என்பவர் அளித்த தகவலின் பேரில், அக்கோயில் அருகே உள்ள வரதப்பன் என்பவரது நிலத்தில் இருந்த கல்வெட்டை படித்து ஆய்வு செய்யப்பட்டது. இக்கல்வெட்டு குறித்து தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவன செயலர் கோவிந்தராஜ் கூறியதாவது: விஜயநகரப் பேரரசை தந்தை இரண்டாம் தேவராயன் ஆண்டபோது அவரது மகன் இம்மடி புக்கராயன் இப்பகுதியை உள்ளடக்கிய முள்வாய் ராஜ்யத்தை ஆளுநராய் இருந்து ஆண்டுவந்துள்ளார். இவரது கல்வெட்டுகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இதுவரை 5 கண்டறியப்பட்டுள்ளது. குட்லட்டியில் உள்ள இக்கல்வெட்டு ஸ்ரீமுக ஆண்டில் வெட்டப்பட்டது. இது பொ.ஆ.1393க்கு இணையானதாகும். அப்போது மகாராஜகடை, குருவிநாயனப்பள்ளி, காரகுப்பம், மேகலசின்னம்பள்ளி, வரட்டனப்பள்ளி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது அங்கணப்பற்று என்னும் பகுதியாகும். இப்பகுதியை நாயக்கம் செய்துவந்த மாமிண்டர் கேசையப்பாவை, ஈராண்டை என்பவரது மகன் வையணந்தார் என்பவர், ஏரி ஒன்றை ஏற்படுத்தி அதனை பாதுகாக்கும் பொருட்டு செல்லப்பிள்ளையார் கோயிலைக் கட்டி அக்கோயிலுக்கு 5 குளகம் விதை விளைகின்ற அளவு கொல்லையையும், 6 குளகம் விதை விளைகின்ற அளவு கழனியும், எண்ணை ஆட்டும் செக்கு ஆகியவற்றை தானமாக வழங்கியுள்ள செய்தியை இக்கல்வெட்டுக் கூறுகிறது. “சாற்றை” ஏரி என்ற சொல் இக்கல்வெட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சாற்றை ஏரி என்பது ஏரியின் ஒரு பகுதியில் சேறு மற்றும் மூங்கிலைப் பயன்படுத்தி ஒரு தடுப்பணை போன்று அமைத்து அதனை மீன் பிடிக்கப் பயன்படுத்துவதாகும். இப்போதும் கிருஷ்ணகிரி பகுதி ஏரிகளில் இவ்வமைப்பு காணப்படுகிறது. இச்சொல் தமிழகத்திலேயே இக்கல்வெட்டில்தான் முதன் முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடதக்கதாகும். இவ்வூரை ஒட்டி அந்த ஏரி காணப்படுகிறது. மேலும் இக்கல்வெட்டு செக்கினை “முக்கை செக்கு” எனக் குறிக்கிறது. வழக்கமான இரண்டு கம்புகளோடு, எண்ணை ஆட்டுபவர் உட்காருவதற்காக மேலும் ஒரு பலகை அமைத்து உருவாக்கப்பட்ட செக்கினைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது எனப் புரிந்துக் கொள்ளலாம். அங்கிருந்த பிள்ளயார் கற்சிற்பம் தற்போது சாலை அருகே உள்ள புதிய கோயிலில் உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.



இந்த ஆய்வின்போது கிருஷ்ணகிரி வரலாற்று ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் சங்க செயலர் தமிழ்செல்வன், துணைச் செயலர் பாலாஜி, சரவணகுமார், ராமச்சந்திரன், டெய்சி ராணி, டேனியல் தீபக், பென்னாகரம் தெய்வம், தர்மகர்த்தா நரசிம்மன், கொட்டிலேட்டி ராஜேந்திரன் மற்றும் ஊர் மக்கள் உடனிருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161